

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | செப்டம்பர் 09, 2021 | புரட்சி 20 | முழக்கம் 28 | விலை: ரூ.3.00

## சட்டப் பேரவையில் முதலமைச்சர் வரலாற்றுப் பிரகடனம்

# செப்.17–‘சமூக நீதி நாள்’

- தமிழகம் முழுதும் அரசு அலுவலகங்களில் சுயமரியாதை – பகுத்தறிவு உறுதிமொழி.
- பெரியார் முடித்த ‘சுற்றுப் பயணத்தை’ இந்த ஆட்சி தொடரும்.
- பெரியார் போராட்டத்தை – பேச்சை – எழுத்தை வேறு எவராலும் பின்பற்ற முடியாது.
- எதிர்காலத்துக்குப் பாதை அமைக்கப் போவது பெரியார் கொள்கைகளே.

*பெரியார் பிறந்த நாளை ‘சமூக நீதி நாள்’ என்று, தமிழக சட்டப் பேரவையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் வரலாற்றுச் சிறப்பு மிக்க அறிவிப்பை (6.9.2021) 110ஆவது விதியின் கீழ் சட்டப் பேரவையில் அறிவித்தார்.*

*அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் மேஜைகளைப் பலமாகத் தட்டி இந்த அறிவிப்பை வரவேற்று, தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தினர்.*

*‘இந்த அறிவிப்பை வெளியிடுவது என் வாழ்வில் கிடைத்தற்கரிய நல்வாய்ப்பு’ என்று முதல்வர் உணர்ச்சிபூர்வமாகக் குறிப்பிட்டார்.*

*“நாங்கள் கடவுள் நம்பிக்கையாளர்களானாலும் இந்த அறிவிப்பை வரவேற்கிறோம்” என்று பாரதிய ஜனதா கட்சியின் சட்டமன்றக் குழு தலைவர் நயினார் நாகேந்திரன் கூறினார்.*

*அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் வைத்திலிங்கம், ஈசுவரன் (கொ.ம.தே.க.), ஜவஹிருல்லா (மனிதநேய மக்கள் கட்சி), சதன். திருமலைக் குமார் (ம.தி.மு.க.), சிந்தனைச் செல்வன் (வி.சி.க.), செல்வப் பெருந்தகை (காங்கிரஸ்), தளி. ராமச்சந்திரன் (சி.பி.அய்.), புரட்சி பாரதம் ஜெகன் மூர்த்தி ஆகிய அனைத்துக் கட்சியினரும் இந்த அறிவிப்பை வரவேற்றுப் பேசினர்.*

*தமிழக முதல்வர் வெளியிட்ட அறிவிப்பு:*

திராவிட முன்னேற்றக் கழகம் முதன் முறையாக 1967 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த போது இந்த ஆட்சியே தந்தை பெரியாருக்கு காணிக்கை என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்தார். 6 ஆவது முறை ஆட்சிக்கு வந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்தப் பகுத்தறிவுப் பகலவனின் அறிவுச் சுடரை போற்றும் விதமாக வரலாற்றுச் சிறப்பு மிக்க அறிவிப்பு ஒன்றை விதி எண் 110இன் கீழ் பேரவைத் தலைவர் அனுமதியோடு இந்த மாமன்றத்தில் வெளியிடுவதை என் வாழ்வில் கிடைத்தற்கறிய நல் வாய்ப்பு என்று நான் கருதுகிறேன்.



“ஈ.வெ.இராமசாமி என்கிற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தைப் போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக மாற்றும் தொண்டை மேல் போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன். இதை செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்த பணியை செய்ய யாரும் முன் வராத காரணத்தினால் நான் அதை மேல் போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன்” என்று அறிவித் துக் கொண்டு 95 வயது வரை மூத்திரச் சட்டியைத் தூக்கிக் கொண்டு இந்த இனத்துக்காக நாட்டுக் காகப் போராடியவர் தான் தந்தை பெரியார் அவர்கள்.

‘மானமும் அறிவும் மனிதர்கு அழகு’ என்பதையே அடிப்படையாகக் கொண்டு சுயமரியாதை இயக்கம் தொடங்கிய தந்தை பெரியார் அவர்கள் மானமும் அறிவும் உள்ள மனிதர்களாக ஆக்குவதற்கு அறிவுலக ஆசானாக இந்த நாட்டை வலம் வந்தார். அவர் நடத்திய போராட்டங்கள் யாராலும் காப்பி அடிக்க முடியாத போராட்டங்கள். அவர் எழுதிய எழுத்துக்கள் யாரும் எழுதத் தயங்கும் எழுத்துக்கள். அவர் பேசிய பேச்சுக்கள் யாரும் பேச பயப்படும் பேச்சுக்கள். தமிழர் நலமெல்லாம் தன்னுடைய நலமாக கருதினார். தமிழர்க்கு எதிரானவை எல்லா வற்றையும் தனது எதிரியாக கருதி எதிர்த்திருக்கிறார். அவர் நடந்த நடை, அவர் நடத்திய சுற்றுப் பயணங்கள், அவர் நடத்திய மாநாடுகள், அவர் நடத்திய போராட்டங்களை சொல்லத் தொடங்கினால், இந்த மாமன்றத்தையே பத்து நாட்கள் ஒத்தி வைத்து விட்டுப் பேச வேண்டும்.

மனிதனுக்கு மனிதன் ஏற்றத் தாழ்வுகள் இல்லை. ஆணும், பெண்ணும் சரிநிகர் சமானம். இவை இரண்டும் தான் அவரது அடிப்படைக் கொள்கைகள். ஜாதி ஒழிப்பு, பெண்ணடிமைத்தனம் ஒழிப்பு ஆகிய இரண்டும் தான் அவரது இலக்குகளாக இருந்திருக்கிறது. அவை இரண்டிற்கும் எவையெல்லாம் தடையாக இருக்கிறதோ அவையெல்லாவற்றையும் அறிவியல் பூர்வமாக கேள்வி கேட்டார். தன்னைப் போலவே சிந்திக்க தூண்டினார். அவரது சுயமரியாதை சிந்தனையால் தமிழினம் சுயமரியாதை பெற்றது. அவர் உருவாக்கிய பகுத்தறிவு கூர்மையால் தமிழினம் சிந்தனை தெளிவு பெற்றது. ஜாதியால் அடக்கி, ஒடுக்கப்பட்ட மனிதர்கள், கல்வி வேலை வாய்ப்பில் மேன்மை அடைவதற்கான சமூக நீதிக் கதவைத் திறந்து வைத்தது அவரது கைத்தடியே ஆகும்.

தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல இன்று இந்தியா முழுவதும் சமூகநீதி கருத்துக்கள் விதைக்கப்பட் டுள்ளது என்று கூறினால் அதற்கு அவர் போட்ட அடித்தளமே காரணம். நாடாளுமன்றத்தின் வாசலுக்கே போகாத அவரால் தான், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தம் கொண்டு வரப்பட்டது. சட்டமன்றத்திற்குள் வர ஆசைப்படாத அவரது சிந்தனைகள் சட்டங்களாக ஏராளமாக இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. தனது சிந்தனையை அடுத்தவர் மூலமாக செய்ய வைக்கும் அபூர்வமான ஆற்றல் அவருக்குத் தான் இருந்தது. ‘என் வாழ்வில் வசந்த காலம் என்பது, தந்தை பெரியாருடன் நான் இளைஞனாக இருந்து வலம் வந்த காலம் தான்’ என்று நம்மையெல்லாம் உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். ’பாராட்டிப் போற்றி வந்த பழமை லோகம் ஈரோட்டு பூகம்பத்தால் இடியுது பார்’ என்று எழுதினார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

பேரறிஞர் பெருந்தகை அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் உருவான குருகுலம் பெரியாருடைய குருகுலம் தான். இந்த குருகுலப் பயிற்சி தான் திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கி அரசியல் புரட்சிகர கருத்துக்களை தமிழ்நாட்டில் விதைத்தது. ஆட்சிக்கு வந்து அதே கொள்கைகளை நிறைவேற்றி வரும் கட்சி. அந்த காட்சியை நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். உலகில் எந்த சீர்திருத்த இயக்கத்திற்கும் கிடைக்காத புகழாரம். சீர்திருத்தவாதிகள் பேசிவிட்டு போயிருப்பார்கள், ஆட்சியாளர்களுக்கு அதன் வாசனையே இருக்காது. தமிழ்நாட்டில் மட்டும்தான் ஒரு சீர்திருத்த இயக்கம் அரசியல் இயக்கமாக மாறி அந்த சீர்திருத்தக் கருத்துக்களை சட்டமாக்கவும் ஆக்கி அந்த சமுதாயத்தை மேன்மையடைய வைத்திருக் கிறது. அவரால் கல்வி பெற்றவர்கள், அவரால் வேலை வாய்ப்பு பெற்றவர்கள், அவரால் அதிகாரத்தைப் பெற்றவர்கள், அவரால் பெண்ணினம் அடைந்த வளர்ச்சிகள், ஒடுக்கப்பட்ட மக்களிடத்தில் எழுச்சிகள் ஆகியவற்றிற்கு இன்றைய தமிழ்நாடே சாட்சி. இந்த விதை தந்தை பெரியார் போட்ட விதை. பேரறிஞர் அண்ணா அதற்கு எருவூட்டினார்கள், தலைவர் கலைஞர் அவர்கள் அதை வளர்த்தார்கள். அதனை மாபெரும் விருட்சமாக மாற்ற வேண்டிய கடமை நமக்கு இருக்கின்றது.

சுயமரியாதை, பகுத்தறிவு, சமதர்மம், சமூக நீதி, இன உரிமை ஆகியவற்றை அடிப்படை யாகக் கொண்டு அந்தக் கொள்கைகளை தந்தை பெரியார் அவர்கள் உருவாக்கினார்கள்.

அதுதான் கடந்த நூற்றாண்டில் இந்த சமூகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டது. எதிர் காலத்திற்கு பாதை அமைத்துத் தரப் போகிறது.

இந்த உணர்வை, உணர்ச்சியை, சிந்தனையை விதைக்கும் விதமாக அறிவாசான் தந்தை பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17ஆம் நாள் ‘சமூக நீதி நாள்’ ஆக கொண் டாடப்படும் என்று தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது.

தந்தை பெரியாரின் அறிவு வெளிச்சத்தில் வளர்ந்தவர்கள் நாம். நமது நன்றியின் அடையாளமாக இந்த நாளை கொண்டாடுவோம். ஜாதிய ஏற்றத் தாழ்வுகள், தீண்டாமைக் கொடுமைகள், மத வேறு பாடுகள் ஆகியவற்றை உதறித் தள்ளுவோம். பெண் களை சமநிலையில் மதிப்போம். அந்த எண்ணத்தை விதைக்கும் விதமாக இந்த உறுதி மொழியை தயாரித் துள்ளோம். ஆண்டுதோறும் செப்டம்பர் 17 ஆம் நாளன்று தலைமைச் செயலகம் தொடங்கி அனைத்து அரசு அலுவலகங்களிலும் கீழ்கண்ட உறுதி மொழியை அனைவரும் எடுத்துக் கொள்வோம்.

*“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற அன்பு நெறியும்,*

*யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற பண்பு நெறியும்,*

*எனது வாழ்வியல் வழிமுறையாக கடைப்பிடிப்பேன்.*

*சுயமரியாதை ஆளுமை திறனும், பகுத்தறிவுக் கூர்மைப் பார்வையும் கொண்டதாக எமது செயல்பாடுகள் அமையும்.*

*சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை நான் ஒப்படைத்துக் கொள்வேன்.*

*மானுட பற்றும் மனிதாபிமானமும் ஒன்றே எனது இரத்த ஓட்டமாக அமையும்.*

*சமூக நீதியை அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைக்கும் எனது பயணம் தொடர இந்த நாளில் உறுதி ஏற்கிறேன்”*

என்ற உறுதிமொழியை எடுத்துக் கொள்வோம் என்று இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள் கிறேன்.

தந்தை பெரியார் மறைந்த போது, “தந்தை பெரியார் தனது சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டார். நாம் தொடர்வோம்” என்றார் அன்றைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள். எனவே நாம் தொடர்வோம், தொடர்வோம், தொடர்வோம்!

## சமூக நீதிக் கதவைத் திறந்து வைத்தது பெரியார் கைத்தடியே!

# அயோத்திதாசர்: சில வரலாற்றுக் குறிப்புகள்

***தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், அயோத்திதாசப் பண்டிதருக்கு தமிழக அரசு சார்பில் மணிமண்டபம் கட்டப்படும் என்ற அறிவிப்பை சட்டமன்றத்தில் வெளியிட்டுள்ளார். அயோத்திதாசர் பற்றிய சில வரலாற்றுக் குறிப்புகளை இளைய தலைமுறைக்கு இங்கே தொகுத்து தருகிறோம்.***

- *1845ஆம் ஆண்டு மே 20ஆம் நாள் சென்னை தேனாம் பேட்டையில் கந்தசாமி இணையருக்குப் பிறந்த குழந்தை காத்தவராயன். சித்த மருத்துவத்தைப் பரம்பரைத் தொழிலாகக் கொண்ட குடும்பம். சென்னை காசிமேடு பகுதியில் வாழ்ந்த வீ.அயோத்திதாசர் என்ற பன்மொழி அறிந்த பெரும் புலவரிடம் இளமையில் கல்வி கற்றார். அவர் நினைவாக தனது பெயரை அயோத்திதாசர் என்று மாற்றிக் கொண்டார்.*
- *“உயர் நிலையையும் இடை நிலையையும் கடை நிலையையும் பாகுபடுத்தி அறிய முடியாத மக்களுக்கு நீதி, சரியான பாதை மற்றும் நேர்மையைக் கற்பிப்பதற்காக”, 1907ஆம் ஆண்டில் அவர் தொடங்கிய ‘ஒரு பைசா தமிழன்’ ஏடு, பிறகு ‘தமிழன்’ என்று பெயர் மாறி, அவர் இறக்கும் வரை (5.5.1914) 7 ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளி வந்து உணர்வலைகளை உசுப்பி விட்டது.*
- *அவர் பெரியார் காலத்துக்கு முந்தையவர். 1881இல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டபோது, தனது சமூகத்தினர் ‘பறையர்’ என்று பதிவிடக் கூடாது; ‘சாதியற்ற திராவிடர்கள் - ஆதி திராவிடர்கள்’ என்று பதிவிட வேண்டும் என்று வற்புறுத்தி, அப்படியே பதிய வேண்டும் என்று பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கும் வேண்டுகோள் விடுத்தார்.*
- *பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் உதவியாளர்களாகவும், சமையல் செய்பவர் களாகவும் நெருங்கிப் பழகியவர்கள், பார்ப்பனிய ‘தீண்டாமைக்கு’ உள்ளாக்கப்பட்ட மக்கள். அயோத்திதாசர் பாட்டனார் கந்தப்பன், தம்மிடம் பரம்பரையாகக் காப்பாற்றப்பட்டு வந்த திருக்குறளின் மூல ஓலைச் சுவடியை பிரிட்டிஷ் அய்.சி.எஸ். அதிகாரியான ஆரிங்டனிடம் அளித்து, அதை நூலாகப் பதிப்பிக்கக் காரணமாக இருந்தவர். 1831இல் திருக்குறள் பதிப்பிக்கப்பட்டது.*
- *1891இல் ‘திராவிட மகாஜன சபா’வைத் தொடங்கினார். இலங்கைக்கு தனது சமூகத்தைச் சார்ந்தவர்களோடு இலங்கைக்குச் சென்று ‘மகாபோதி’ சங்கத் திடம் முறைப்படி ‘பவுத்தத் தீட்சைப்’ பெற்று பவுத்தர் ஆனார். (அவர்களை இங்கைக்கு அழைத்துச் சென்றது கர்னல் ஆல்காட். இவர் தியோசபிக்கல் சொசைட்டியில் அன்னிபெசன்டுடன் இணைந்து செயல்பட்டவர்)*
- *திரும்பி வந்து 1900இல் ‘மகாபோதி சொசைட்டி’ கிளையை சென்னையில் தொடங்கினார். பிறகு இலங்கை மகாபோதி சங்கத்துடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு ‘சாக்கைய பவுத்த சங்கத்தை’த் தொடங்கினார். மகாபோதி சங்கம் ஜாதியை நியாயப்படுத்தியதை தம்மால் ஏற்க முடியாது என்று அறிவித்தார் அயோத்திதாசர் (தமிழன் - 17.5.1911).*
- *அரசியல் விடுதலைக்காக ‘சுயராஜ்யம்’ கேட்பதைவிட சமூகச் சீர்திருத்தம் வந்தாக வேண்டும்; ஜாதி ஒழிக்கப்பட வேண்டும் என்பதே அவரது கருத்து.*
- *சுதேசி அரசியல் பேசியவர்களை அவர் விமர்சித்தார். அதன் காரணமாக ‘தமிழன்’ பத்திரிகை, ஆங்கிலேய ஆதரவு பத்திரிகை என்று விமர்சிக்கப்பட்டது. “நாம் சுதேசியை தூற்றுவதற்கோ, பரதேசிகளைப் போற்றுவதற்கோ வந்தவர்கள் அல்ல; சகல மக்களின் நீதிக்காகப் போராட வந்தவர்கள்” என்று பதிலளித்தார். (தமிழன் 18.8.1909)*



- *சுயராஜ்யம் பேசியவர்களை சாதித் திமிர், அறிவுத் திமிர், பணத் திமிர் கொண்டவர்கள் என்று விமர்சித்த அவர், ‘அன்னியப் பொருள்களைப் புறக்கணிப்பதை விட, சாதிப் பெருமையைப் புறக்கணிப்பதே முதன்மையானது’ என்றார். (பெரியார் சிந்தனை யோடு அவரது சிந்தனையும் இதில் இணைந்தே நின்றது)*
- *பெங்களூரில் நடைபெற்ற பெரியார் 68ஆவது பிறந்த நாள் விழாவில் பெரியார் பேசும்போது, “என் பகுத்தறிவுப் பிரச்சாரத்துக்கும் சீர்திருத்தக் கருத்து களுக்கும் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் பண்டிதமணி அயோத்திதாசரும் தங்கவயல் ஜி. அப்பாத்துரையும் ஆவார்கள்” என்று கூறினார்.*
- *கடவுள் தான் உலகத்தைப் படைத்தார் என்ற வாதத்தை மறுத்தார். கடவுள் இல்லாமல் உலகம் உண்டாயிருக்குமா? குயவன் இல்லாமல் மண்பாண்டம் வந்திருக்குமா?” என்று கேட்போருக்கு, “அப்படியானால் அந்தக் கடவுளை உருவாக்கியது யார்” என்று கேட்டார். “கடவுள் என்னும் ஒரு உருவம் கட்டைத் தடிபோல் சட்டத் திட்டமாக உட்கார்ந்து கொண்டு உலகத்தை சிருஷ்டிப்பவர் என்றால் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்” என்றார்.*
- *பாரதி, “ஈனப் பறையர்களேனும்” என்று கூறியதைக் கடுமையாக எதிர்த்து எழுதினார். இப்படிப் பேசுவது ஜாதியொழிந்த ஒற்றுமையை எப்படி ஏற்படுத் தும் என்று கேட்டதோடு, இவர்கள் “பாட்டுப் பிரசங்கிகள்” என்று சாடினார்.*
- *திராவிட எதிர்ப்புப் பேசும் இன்றைய ‘குழப்ப தமிழ் தேசியர்களுக்கு’ அயோத்திதாசர், அவரது காலத்திலேயே பதிலளித்துள்ளார்.*

  *“சுதேசிகள் (பூர்வகுடிகள்) என்போர் யார் என்றால், தமிழ் பாஷையில் பிறந்து, தமிழ் பாஷையில் வளர்ந்து, தமிழ் பாஷைக்கு உரியோர்களாக விளங்கும்* **பூர்வீக திராவிட குடிகளேயாகும்.**


  *மற்றுமிருந்த ஆந்திர, கன்னட, மராஷ்டகரும் பூர்வக்குடிகளேயாயினும் திராவிடர்களைப்போல் தேசவிருத்தியை நாடியவர்களும், பல தேசங்களுக்குச் சென்று பொருளை சம்பாதித்து சுயதேசத்தை சீர்பெறச் செய்தவர்களும் பூர்வ சரித்திரங்களையும், ஞானநீதிகளையும் பல்லோர்க்கு உணர்த்தி சுயபாஷையில் எழுதி வைத்துள்ளவர்களும், சாதிபேதமெனுங் கொடியச் செயலைப் பூர்வத் தில் இல்லாமல் எவ்வகையாக வாழ்ந்து வந்தனரோ நாளது வரையில் வாழ்ந்தும் வருகின்றனரோ அவர்களே யதார்த்த சுதேசிகளும் பூர்வக் குடிகளுமாவர்.*

  *- (அயோத்திதாசர் சிந்தனைகள், ஞான அசோசியஸ் தொகுப்பு - பக். 432)*
- *2007ஆம் ஆண்டு ‘தமிழன்’ வார ஏட்டுக்கான நூற்றாண்டு விழாவை அன்றைய தமிழக அரசே நிதியமைச்சர் பேராசிரியர் அன்பழகன் தலைமையில் கொண்டாடியது. நிதிநிலை அறிக்கையிலேயே சட்டசபையில் இதற்கான அறிவிப்பு வெளியானது. அயோத்திதாசர் நூல்களையும் அன்றைய முதல்வர் கலைஞர் அரசுடைமையாக்கினார்.*

*இப்போது தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், அயோத்திதாசருக்கு மணிமண்டபம் கட்டப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்.*

– தொகுப்பு ‘இரா’

# வடமொழி ஆகமங்களை எதிர்த்தவர் வ.உ.சி.



*வ.உ.சி இன் 150 (05.09.2021) ஆவது பிறந்தநாள் முடிந்துள்ளது. தமிழ்நாடு அரசு அவருக்கு சிலை, மணிமண்டபம் எழுப்புவது உள்ளிட்ட சிறப்பான முடிவுகளை எடுத்துள்ளது. வ.உ.சி பற்றி ஏராளமான கட்டுரைகள் ஏடுகளில் வந்துள்ளன. காங்கிரஸ் கட்சியில் அவர் சில ஆண்டுகாலம் மட்டுமே இருந்திருந்தாலும் கூட அவர் சமூக நீதிக் கொள்கையிலும், பெரியாரின் சுயமரியாதை இயக்கத்திலும் அவர் மிக நெருக்கமாக இருந்த வரலாற்றை நாம் நினைவூட்ட வேண்டும். ஏராளமாக அவரைப்பற்றி கூற முடியும்.*

*1927 ஆம் ஆண்டு நவம்பர் 5, 6 தேதிகளில் சேலம் மாவட்ட காங்கிரஸ் மாநாட்டிற்கு வ.உ.சி தலைமை தாங்கினார். அந்த மாநாட்டில் சூத்திரன் என்ற பதம் பொது ஆவணங்களில் இருந்து நீக்கப்பட வேண்டும். பெண்களுக்கு சொத்துரிமை வழங்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்யும் தீர்மானத்தை, வ.உ.சி தனது முயற்சியால் நிறைவேற்றச் செய்தார்.*

*சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களால் எழுதப்பட்ட ‘ஞான சூரியன்’ என்ற நூல் இந்து மதத்தில் பார்ப்பனப் புரட்டுகளை ஆதாரத்துடன் அம்பலப்படுத்திய ஒரு நூலாகும். 1928ஆம் ஆண்டு பெரியார் இந்த நூலை சுயமரியாதை பிரச்சார நிறுவன கழகத்தால் வெளியிட்டார். இந்த நூலுக்கு முன்னுரை எழுதியது வ.உ.சி என்பது குறிப்பிடத்தக்கது. அந்த முன்னுரையில் அவர் ஒரு பகுதியில், “பிராமணப் புரோகிதர்களும், பூசாரிகளும் பிராமணர் அல்லாதவர்களின் பொருள்களை கவருவதற்கு தொன்று தொட்டு செய்து வரும் சூழ்ச்சிகளையும், கொலைகளையும் இந்த நூல் விரிவாக எடுத்துக் கூறுகிறது. பிராமணப் புரோகிதர்களையும் பூசாரி களையும் இந்த மக்கள் இன்னும் ஏற்றுக் கொள்ள வேண்டுமா? என்ற கேள்வியையும் இந்த நூல் எழுப்புகிறது. இந்து சமயம் என்பதன் பொய்களையும், புரட்டுகளையும், ஆபாசங்களையும் அச்சமயம் பெயரால் செய்யப்படுகின்ற சடங்குகளின் வாயிலாக பிராமணரல்லாதார் தாழ்த்தப்படுவதையும் அக்கொள்கை யிலிருந்தும், தாழ்விலிருந்தும் பிராமணரல்லாதார் தப்பி வர வேண்டிய அவசியத்தையும் இந்த நூல் விளக்குகிறது” என்று அவர் குறிப்பிட்டிருப்பதோடு சைவர்களையும் கடுமையாக சாடுகிறார். இப்போது அனைத்து சாதியினரும் அர்ச்சகராவது ஆகமத்துக்கு எதிரானது என்று கூச்சல் போடும் பார்ப்பனர்களுக்கு அப்போதே வ.உ.சி. இந்த முன்னுரையில் பதிலளித்துள்ளார்.*

*“வட மொழி ஆகமங்களை ஏற்றுக் கொண்டு சிவாலயங்களில் நடத்தப்படுகின்ற வழிபாட்டு முறைகளிலிருந்து சைவர்கள் விடுபட்டு பார்ப்பனர்கள் பிடியிலிருந்து வெளியே வரவேண்டும். ஜாதி பேதமே காணாத திருக்குறள் தமிழ் மக்களிடத்தில் சென்று சேரவேண்டும்” என்று கூறியுள்ளார்.*


*காங்கிரசில் திலகர் ஆதரவு அணியில் அவர் இடம் பெற்றிருந்தாலும், அவரது பார்ப்பனிய கருத்துகளை வ.உ.சி. ஏற்கவில்லை. திலகர் கீதைக்கு ஆதரவாக உரை எழுதினார். வ.உ.சி. கீதையை மறுத்து எழுதினார். அயர்லாந்து நாட்டைச் சார்ந்த அன்னிபெசன்ட், இந்தியாவில் ‘தியாசபிக்கல் சொசைட்டியை’ உருவாக்கி, ஸ்மார்த்த பார்ப்பனர்களின் ஆதரவாக செயல்பட்டார். அவர் திலகர் ஆதரவாளர்; ஆனால் வ.உ.சி., அன்னிபெசன்ட் அம்மையாரின் பார்ப்பனியத்தை எதிர்த்தார்.*

*1927இல் சேலத்தில் பார்ப்பனரல்லாதார் மாநாட்டில் பங்கேற்று, பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்துப் பேசியதோடு ஜாதி எதிர்ப்பையும் வெளிப்படுத்தினார்.*

*1919இல் அமிர்தசரஸ் நகரில் காங்கிரஸ் மாநாடு நடந்தபோது, பெரியார் பயணமானார். அப்போதெல்லாம் தொடர்வண்டியில் முதல் வகுப்பில் பயணம் செய்தவர் பெரியார். மாநாட்டில் பங்கேற்க முடியாத அளவுக்கு வறுமையில் இருந்தார் வ.உ.சி. சேதி அறிந்த பெரியார், தண்டபாணி பிள்ளையிடம், தனது முதல் வகுப்புப் பயண டிக்கெட்டை மூன்றாம் வகுப்புக்கு மாற்றி, எஞ்சியப் பணத்தை வ.உ.சி.யிடமே கொடுக்கச் செய்தார். அவர் திரும்பி வருவதற்கு பணம் வேண்டும் என்பதற்காக!*

*1928இல் நாகப்பட்டினத்தில் ‘தேச பக்த சமாஜம்’ அமைப்பின் 7ஆம் ஆண்டு விழவில் பெரியார் படத்தைத் திறந்து வைத்து வ.உ.சி. பேசினார். அவரது உரையில் இவ்வாறு கூறினார்:*

> *“திரு. இராமசாமி நாயக்கரைப் பற்றி, நான் அதிகம் சொல்ல வேண்டிய தில்லை. அவரைப் பற்றி அய்ரோப்பாவிலே உள்ள பார்லிமெண்டில் பேசப்படுகிறது என்றால் நாயக்கரின் புகழைப் பற்றி நான் என்ன சொல்வது?*
>
> *திரு. நாயக்கரிடத்திலுள்ள விசேஷ குணம் என்னவென்றால், மனதிற்படும் உண்மையை ஒளிக்காமல் சொல்லும் ஓர் உத்தம குணந் தான். அவரை எனக்கு 20 வருடமாய்த் தெரியும். அவரும் நானும் ஒரே இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றி வந்தோம். அதில் (காங்கிரஸ்) நேர்மையற்றவர்கள் சிலர் வந்து புகுந்தபின், நானும் அவரும் விலகிவிட்டோம். பிறகு நாயக்கர் அவர்களால் ஆரம்பித்து நடத்தப் பெறும் சுயமரியாதை இயக்கத்தைப் பார்த்து, இது எல்லா இயக்கத்திலும் நல்ல இயக்க மாயிருப்பதால், நானும் என்னாலான உதவியை அவ்வியக்கத்துக்குச் செய்து வருகிறேன். சுருங்கச் சொல்லின், நாயக்கரவர்கள் தமிழ் நாட்டின் எல்லாத் தலைவர்களையும்விடப் பெரிய தியாகி என்றுதான் சொல்ல வேண்டும்.” (ஆதாரம்: சாமி சிதம்பரனார் எழுதிய ‘தமிழர் தலைவர்’ நூல்)*



பெரியாருக்கு வ.உ.சி. எழுதிய கடிதம்

*தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், வ.உ.சி. தியாகத்தைப் போற்றிட வ.உ.சி.க்கு சிலை, வரலாற்று விளக்கக் கண்காட்சி நினைவிடங்கள் அமைக்கும் அறிவிப்புகளை அறிவித்துள்ளார்.*

*பெரியார் நடத்திய வகுப்புரிமை மாநாடுகளில் பங்கேற்று வகுப்புரிமை கொள்கையை தீவிரமாக ஆதரித்தவர் வ.உ.சி.*

*(8, 15, 22.10.2020 ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழ்களில் வ.உ.சி. குறித்து - கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரை முழுமையாக வெளி வந்துள்ளது)*

# பெரியார் அமைக்க விரும்பிய கலைஞர் சிலையின் வரலாற்றுப் பின்னணி

கலைஞருக்கு அண்ணா சாலையில் சிலை வைக்கப்படும் என்ற அறிவிப்பை தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருக்கிறார். கலைஞர் சிலை அறிவிப்பிற்கு ஒரு நீண்ட வரலாற்றுப் பின்னணி உண்டு.

கலைஞருக்கு சிலை அமைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர் பெரியார். மிகவும் ஒடுக்கப்பட்ட சமூகத்தில், புறக்கணிக்கப்பட்ட ஒரு சமூகத்திலிருந்து நாட்டின் உயர் பதவி என்ற நிலைக்கு கலைஞர் உயர்ந்ததை தனது தொண்டுக்கு கிடைத்த மகத்தான வெற்றியாகவே பெரியார் கருதினார். அதை வெளிப்படையாகவும் பேசினார். சமூக செல்வாக்கோ, குடும்ப செல்வாக்கோ ஏதுமற்ற ஒரு குடும்பத்தில் இருந்து வந்த கலைஞர் தனது ஆற்றலால், திறனால் தன்னை செதுக்கிக்கொண்டு உயர்ந்த நிலைக்கு எட்டியதைக் கண்டு பூரித்த பெரியார், அண்ணா உயிருடன் இருக்கும் போதே கலைஞருக்கு சிலை வைக்கவேண்டும் என்று 1968 மே 28, 29 தேதிகளில் விடுதலையில் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது. கலைஞருக்கு சிலையும் தயாராகி விட்டது. ஆனால் கலைஞர் அதை விரும்பவில்லை. “இதில் கலைஞர் தனது அபிப்பிராயத்தை வெளியிட அவருக்கு உரிமையில்லை, இந்த சிலை அமைக்கும் பொறுப்பை நானே ஏற்றுக்கொண்டு எப்படியும் நிறைவேற்றுவேன்” என்று பெரியார் எழுதினார். ஆனாலும் ஒப்புதல் கிடைக்காத காரணத்தால் பெரியார் மரணம் வரை அது நிகழாமலே போய் விட்டது.

பெரியாருக்குப் பிறகு திராவிடர் கழகத்தின் தலைவர் பொறுப்பையேற்ற அன்னை மணியம்மையார் பெரியார் கட்டளையை ஏற்று கலைஞர் சிலை நிறுவும் நடவடிக்கைகளை தொடங்கினார். 21.09.1975இல் அண்ணா சாலையில் மணியம்மையார் தலைமையில் கலைஞர் சிலை திறக்கப்பட்டது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் சிலையை திறந்து வைத்தார். ராஜா சர் முத்தையா செட்டியார், பொதுவுடமைக் கட்சித் தலைவர் மணலி கந்தசாமி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். சீர்காழி கோவிந்தராஜன் தொடக்க நிகழ்வாக பாடல்களை பாடினார். அடிகளாரும், சீர்காழி கோவிந்தராஜரும் இறை நம்பிக்கையாளர்கள். நெற்றியில் திருநீறு அணிந்த கோலத்துடன் கருஞ்சட்டைக் கழகம் நடத்திய இந்த விழாவில் இன உணர்வோடு பங்கேற்றனர். அப்போது இந்தியாவில் நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்யப்பட்டிருந்த காலம். ஆனால் தமிழ்நாட்டில் நெருக்கடி நிலையை எதிர்த்துக் கொண்டே திமுக ஆட்சியில் இருந்தது. சிலை திறப்பிற்கு நான்கு மாதங்கள் கழித்து தான் திமுக ஆட்சி கலைக்கப்பட்டது (1976 சனவரி 31). 1972ஆம் ஆண்டிலேயே திமுகவை விட்டு விலகிய எம்.ஜி.ஆர், கலைஞர் சிலையை அண்ணா சாலையில் நிறுவினால் போக்குவரத்திற்கு இடையூறு உண்டாக்கும் என்ற காரணத்தைக் கூறி எதிர்ப்பு தெரிவித்தார். “போக்குவரத்திற்கு இடையூறாக சென்னை முழுவதும் கடவுள் சிலைகள் உள்ளிட்ட அனைத்து சிலைகளையும் அகற்றினால் கலைஞர் சிலையையும் நான் அகற்றுவதற்கு தயார்” என்று பதிலடி கொடுத்த மணியம்மையார், “பெரியாரின் கட்டளையை நாங்கள் நிறைவேற்றுகிறோம் எதிர்ப்பு காட்டுவது பெரியாரை அவமதிப்பதாகும்” என்று பதிலடி தந்தார்.

இதற்கிடையே சிலை திறப்பிற்கு தடை கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. வழக்கைப் போட்டவர் அ.இ.அதிமுக வின் வழக்கறிஞராக இருந்த பி.எச். பாண்டியன். (பிறகு சட்டப் பேரவைத் தலைவரானவர்) வழக்கு விசாரணைக்கு வருவதற்கு முதல் நாள் இரவு முழுவதும் வேலை செய்து விடியற்காலைக்குள் அண்ணா சாலையில் கலைஞர் சிலையை திராவிடர் கழகத் தோழர்கள் நிறுவி விட்டனர் என்பது வரலாறு. பெரியார் தனக்குப் பிறகு மணியம்மையாரின் எதிர்கால பாதுகாப்பு கருதி அவருக்கு தெரியாமலேயே சில சொத்துக்களை அவர் பெயருக்கு எழுதி வைத்திருந்தார். அதில் ஒன்று ஈரோட்டில் பெரியார் வாழ்ந்த இல்லம். அந்த இடத்தை பெரியார் நினைவு இல்லமாக்க அரசு விரும்பியது. மணியம்மையாரிடம் அதை அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கலைஞர் பெரியாரின் 96ஆவது பிறந்தநாள் விழா மேடையில் கோரிக்கை வைத்தார். மணியம்மையார் அதே மேடையிலே அந்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டு இடத்தை ஒப்படைப்பதில் தான் மிகுந்த மகிழ்ச்சியை அடைவதாகத் தெரிவித்தார். அண்ணா சாலையில் திமுக சார்பில் பெரியார் சிலை திறப்பு விழா நடந்த போது (17.09.1974) மணியம்மையார் வீட்டுக்கான ஆவணங்களை கலைஞரிடம் விழா மேடையில் கையளித்தார்.

அவசர நிலை காலத்தில் கலைஞரின் துணைவியார் இராஜாத்தி அம்மா அவர்களை வருமான வரித் துறையினர் சோதனை என்ற பெயரில் அவமதித்ததைக் கண்டு பொங்கி எழுந்த மணியம்மையார், பெரியார் திடலின் வாயிலில் கட்டி முடிக்கப்பட்டு திறப்புக்காக காத்திருந்த ஏழு மாடிக் கட்டிடத்தை திறக்க இராஜாத்தி அம்மா அவர்களை அழைக்க முடிவு செய்தார். அந்த நெருக்கடி காலத்திலும் இப்படிப்பட்ட ஒரு முடிவை அவர் எடுக்க முன் வந்த போது அதிகார வர்க்கம் அவரை மிரட்டியது. ஆளுநருக்கு ஆலோசகராக இருந்த வேத குலத்தைச் சார்ந்த அதிகாரிகள் இதற்கு மறைமுகமான மிரட்டல்களை விடுத்தனர். அப்படி இராஜாத்தி அம்மாளை அழைத்தால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று தெரிவிக்கப் பட்டது. பிறகு நாகம்மையார் இல்லத்தில் வளர்ந்த கைவிடப்பட்ட குழந்தைகளை வைத்து அந்த ஏழு மாடிக் கட்டிடத்தை மணியம்மையார் திறந்து வைத்தார்.

இராஜாத்தி அம்மாள் அவர்களையும் அப்போது சிறு குழந்தையாக இருந்த அவரது மகள் கனிமொழியையும் பெரியார் திடலுக்கு அழைத்து ஒரு நாள் முழுவதும் தன்னுடன் தங்க வைத்து ஆறுதல் வார்த்தைகளைக் கூறி உற்சாகமூட்டி உணவு வழங்கி உபசரித்து வழியனுப்பி வைத்தார். நெருக்கடி நிலை அமல்படுத்தப்பட்ட பிறகு மிசா என்னும் ஆள் தூக்கி சட்டத்தில் நாடு முழுதும் திமுக, திக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அப்போது உள்துறை அமைச்சர் பிரம்மானந்த ரெட்டி சென்னை வந்திருந்த போது அப்போது திமுக வில் இருந்த, க. இராசாராம் அவர்களின் முயற்சியால் பிரம்மானந்தரெட்டியை சந்தித்து அன்னை மணியம்மையார் பேசினார். “அரசியல் தொடர்பே இல்லாத சமுதாய இயக்கமான பெரியார் இயக்கத் தோழர்களை ஏன் கைது செய்தீர்கள்” என்று நேருக்கு நேராக உள்துறை அமைச்சரிடம் மணியம்மையார் கேட்டார். அதற்கு “திமுக.வை நீங்கள் ஆதரிக்கிறீர்கள், அதுதான் கைதுக்கு காரணம் இனி திமுக.வை ஆதரிக்க மாட்டோம் என்று எழுதி கொடுங்கள் உடனே விடுதலை செய்கிறோம்” என்று பிரம்மானந்தரெட்டி கூறிய போது அடுத்த நிமிடமே அங்கிருந்து பதிலே கூறாமல் வெளியேறினார் மணியம்மையார்.

பெரியார் உயிருடன் இருக்கும் போதே அவருக்கு சிலைகள் திறக்கப்பட்டன என்பது வரலாறு. அதில் பெரியாரும் பங்கேற்றார். கோயிலுக்குச் சென்ற ஒரு பக்தர் சாமி சிலையைப் பார்த்தவுடன் ஏற்படுகிற உணர்வுகளுக்கு மாற்றாக சமுதாய புரட்சிக்கும், சிந்தனை மறுமலர்ச்சிக்கும் வித்திட்ட தலைவர்களின் சிலையை திறக்க வேண்டும். இந்த சிலைகள் வழியாக மக்களிடம் அவரது பகுத்தறிவு சிந்தனைகள் சமுதாய புரட்சிக் கருத்துக்கள் போய் சேர வேண்டும் என்று பெரியார் கூறினார்.

1970 ஆம் ஆண்டில் சேலத்தில் பெரியார் சிலையை (20.09.1970) சமூகவியல் அறிஞரும் மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக இருந்தவருமான எஸ். சந்திர சேகர் திறந்து வைத்தார். பிரபல கோவை தொழில் அதிபர் ஜி.டி.நாயுடு தலைமை தாங்கினார். அதில் பெரியார் பங்கேற்று பேசினார். அடுத்த அய்ந்து நாட்களில் 25ஆம் தேதி திண்டுக்கல்லில் பெரியார் சிலையை குன்றக்குடி அடிகளார் தலைமையில் கலைஞர் திறந்து வைத்தார். அப்போது தெருவுக்கு தெரு ஒரு பகுத்தறிவாளர் சிலை நிறுவப்பட வேண்டும் என்று கலைஞர் பேசினார்.

1971ஆம் ஆண்டு க.இராசாராம் அவர்கள் முயற்சியோடு திராவிடர் கழக தோழர்கள் பெரியாருக்கு வெள்ளி சிம்மாசனம் வழங்கும் விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தனர்(04.11.1971). கலைஞர் பெரியாரைக் கைப்பிடித்து வெள்ளி சிம்மாசனத்தில் அமர வைத்தார். சில நிமிடங்கள் கூட பெரியார் அதில் அமரவில்லை எழுந்து கொண்டு கலைஞரின் கையைப் பிடித்து வெள்ளி சிம்மாசனத்தில் பெரியார் அமர வைத்த போது கூட்டம் உணர்ச்சிவயமானது. கலைஞரும் மிகவும் உணர்ச்சிவசப்பட்டார். “வெள்ளி சிம்மாசனமாக இருந்தாலும் பெரியாரைக் கட்டுப்படுத்தி உட்கார வைக்க முடியாது. அவர் கட்டுக்குள் கொண்டு வரப்பட முடியாத சுதந்திர மனிதர்” என்று கூறிய கலைஞர், “பெரியார் கொள்கைகளை இலட்சி யங்களை நாம் எந்த அளவிற்கு கடைபிடிக்கிறோம் என்பதில் தான் அவரின் வாழ்வின் நீட்டிப்பு இருக்கிறது என்று கூறினார்”. சமுதாயத்திற்கு உழைக்கிற சிந்தனை யாளர்கள், புரட்சியாளர்களுடைய சிலைகள் வழிபாட்டிற்கு உரியவை அல்ல. எதிர்காலத்திற்கு வழிகாட்டக்கூடிய சிலைகள் வரலாறுகளை பேசும் சிலைகள் எம்.ஜி.ஆர் மறைந்தபோது ஏதோ ஒரு வன்முறையாளன் கலைஞர் சிலையை உடைத்தான். அப்போது கூட கலைஞர், “ஒரு தம்பி சிலையில் என் நெஞ்சை தான் கடப்பாரையால் தகர்த்தான்” என்று பெருமையோடு அதைக் குறிப்பிட்டார்.

திரிபுரா வில் புரட்சியாளர் லெனின் சிலையை மத வெறியர்கள் உடைத்தனர். அப்போது பெரியார் சிலைகளும் அதேபோல் உடைக்க வேண்டும் என்று எச்.ராஜா முகநூலில் பதிவிட - நாடே கொந்தளித்தது; பா.ஜ.க.வினரே எதிர்த்தார்கள்; பிறகு தனது ‘அட்மின்’ அப்படிப் போட்டதாக பின்வாங்கிக் கொண்டார்.

ஆனால் சிலை உடைப்புகளால் வரலாற்றாளர்கள் வரலாற்றில் இருந்து ஒரு போதும் அகற்றிவிட முடியாது. வரலாறு இப்போது தமிழ்நாட்டில் திரும்புகிறது.

நெஞ்சில் ஒருவன் கடப்பாரையால் கலைஞர் சிலையை தாக்கினான். இப்போது நெஞ்சு நிமிர்த்தி கலைஞர் சிலை தமிழின உணர்வோடு எழும்பப் போகிறது.

– புரட்சிப் பெரியார் முழக்கம் 09.09.2021

## தி.மு.க. ஆட்சியை ஒழிக்க பார்ப்பனர்கள் நடத்திய ‘சத்ரு சம்ஹார யாகம்’



தமிழக அரசு அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக்கும் ஆணை பிறப்பித்ததற்காக பார்ப்பனர்கள் சங்கரமடத்தில் தமிழக முதல்வர் – தமிழக அரசை அழித்து ஒழிக்க ‘சத்ரு சம்ஹார யாகம்’ நடத்தினர். இது குறித்து ‘தினமலர்’ (ஆக. 31) வெளியிட்ட செய்தி:

உலக நன்மைக்காகவும், ஹிந்து சமயத்திற்கு ஏற்பட்டுள்ள சோதனைகளில் இருந்து விடுபடவும், சத்ரு சம்ஹார லோக க்ஷேம ஹோமங்கள், சென்னையில் சங்கராலயத்தில் ஆக. 30, 2021இல் நடந்தன. ஹிந்து கலாசாரத்தையும், ஆன்மிகத்தையும் வளர்த்து போதித்து வருகிறது, ‘சுதேசி’ பத்திரிகை. இதன் சார்பில், நாட்டில் பரவியுள்ள நோயினை அகற்றவும்; பொருளாதார தேக்கத்தில் இருந்து மீண்டு வரவும்; ஹிந்து சமயத்திற்கு ஏற்பட்டுள்ள சோதனைகளில் இருந்து விடுபடவும், சத்ரு சம்ஹார லோக க்ஷேம ஹோமங்கள் நடத்தப்பட்டன.

சென்னை சேத்துப்பட்டு, சங்கரமட சங்கராலயத்தில், ஆக. 30, காலை 9:00 மணிக்கு துவங்கிய நிகழ்ச்சியில், நடிகர் எஸ்.வி.சேகர் பங்கேற்று, சங்கல்பம் செய்து கொண்டார். ஆன்மிக பேச்சாளர் ஆர்.பி.வி.எஸ்.மணியன் பேசியதாவது:

“நம் தேசத்தின் தற்பேதைய நிலைமை மாற வேண்டும். நம்மை என்னென்ன துன்பங்கள் சூழ்ந்துள்ளன; அவை யாரால் ஏற்படுகின்றன என்பதை அறிந்து, அவற்றுக்கு பரிகாரம் தேட வேண்டும். பகவான் கிருஷ்ண பரமாத்மா, ‘தர்மத்தை காப்பாற்ற, நான் வருவேன்’ என்று கூறியுள்ளார். அவர் வரும்வரை காத்திருக்கக் கூடாது. முயற்சிக்காமல் பகவான் வருவார் என, நாமும் கைகட்டி நின்றால் அழிந்து போவோம். காஷ்மீர் முதல் குமரி வரை, ஒரு குடையின் கீழ் கொண்டு வந்த பெருமை, வல்லபாய் பட்டேலை சாரும்.

கட்சிகளுக்கு தேசத்தை பற்றி அக்கறை இல்லை. நம் யாருக்கும் கட்சி உணர்வே இருக்கக் கூடாது; தேசிய பற்று மட்டுமே இருக்க வேண்டும். இவர்களை வைத்து, தேசம் முன்னேறுவது கஷ்டம். நாட்டின் எதிர்காலம் குறித்து யோசிக்கவே, இந்த சத்ரு சம்ஹார ஹோமம் நடத்தப்படுகிறது. சுப்பிரமணிய சுவாமி அசுரர்களை அழித்தது போல, நாட்டை அழிப்பவர்களிடம் இருந்து காப்பது தான் இந்த யாகம், ஹோமம். அக்னி வளர்த்து யாகம் செய்வதால், நம் வேண்டுதல் நேரடியாக கடவுளை சேரும். இவ்வாறு அவர் பேசினார். ஹோமத்திற்கான ஏற்பாடுகளை, சுதேசி பத்திரிகை நிறுவனரும், நிர்வாக ஆசிரியருமான பத்மினி ரவிச்சந்திரன் செய்திருந்தார்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ப. சிதம்பரம் எழுப்பும் கேள்விகள்

***எல்.அய்.சி. பொதுத் துறை நிறுவனத்தின் பங்குகளை தனியாரிடம் ஏற்கனவே விற்றது மோடி ஆட்சி. இப்போது, தேசிய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து, தொலைத் தொடர்பு, தொடர்வண்டி நிலையங்கள் உள்ளிட்ட 12 அமைச்சகங்களின் சொத்துகளை தனியாருக்கு குத்தகைக்கு விட்டு, அதிலிருந்து 7 இலட்சம் கோடி வருவாய் ஈட்டப் போவதாக அறிவித்துள்ளது. இது குறித்து முன்னாள் நிதியமைச்சர் ப. சிதம்பரம் சில அழுத்தமான கேள்விகளை எழுப்பியுள்ளார்.***

ஒன்றிய பாஜக அரசு தேசிய பணமாக்கல் திட்டத்தின் (National Monetisation Pipeline) நோக்கங்களை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். அடுத்த 4 ஆண்டுகளில் வருவாயைப் பெருக்குவதுதான் உண்மையான நோக்கமா? என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் ப. சிதம்பரம் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக மும்பையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அடுக்கடுக்கான கேள்விகளை அவர் எழுப்பியுள்ளார்."அடுத்த 4 ஆண்டுகளில் குறிப்பிட்ட சில சொத்துகளில் இருந்து ரூ. 6 லட்சம் கோடி வருவாய் ஈட்டப்போவதாக அரசு தெரிவித்துள்ளது. ஒன்றிய அரசு அடையாளம் கண்டுள்ள அந்தச் சொத்துகள் ஆண்டுதோறும் தவறாமல் வருவாய் ஈட்டக் கூடியதாக இருக்கின்றன. இந்நிலையில், வழக்கமாக அந்த சொத்துக்களில் இருந்து கிடைக்கும் வருவாய்க்கும், குத்தகைக்கு விடுவதன் மூலம் அடுத்த 4 ஆண்டுகளில் கிடைக்கும் ரூ. 6 லட்சம் கோடிக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு என்பதை ஒன்றிய அரசு மதிப்பிட்டுள்ளதா?

தற்போது ரூ.1.30 லட்சம் கோடி கிடைக்கிறது. தனியாருக்கு தருவதன் மூலம் ரூ. 20 ஆயிரம் கோடி கூடுதலாக ரூ. 1.50 லட்சம் கோடிதான் கிடைக்கும் என்றால், அதற்காக 70 ஆண்டுகளாகக் கட்டமைத்த நிறுவனங்களை விற்பது சரியாக இருக்குமா?

தேசிய உள்கட்டமைப்புத் திட்டத்துக்கு ரூ.100 லட்சம் கோடி தேவைப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு, அடுத்த 4 ஆண்டுகளில் திரட்டப்படும் இந்த ரூ. 6 லட்சம் கோடி எவ்வாறு போதுமானதாக இருக்கும்?நடப்பு நிதியாண்டு பட்ஜெட்டில் ரூ. 5.5 லட்சம் கோடி நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அந்தப் பற்றாக்குறையைச் சரிசெய்ய ரூ. 6 லட்சம் கோடி பயன்படுத்தப்படாதா?முதலில், ரூ. 6 லட்சம் கோடி கிடைக்கும் என அடையாளம் காணப்பட்டு குத்தகைக்கு விடுவதற்கு இருக்கும் சொத்துகளின் ஒட்டுமொத்த மூலதனத்தின் மதிப்புதான் என்ன? தனியாருக்கு விடப்படும் சொத்துக்கள், 4 ஆண்டுகளுக்குப் பிறகு ஒன்றிய அரசிடம் திரும்பும்போது, அதன் மதிப்பு என்னவாக இருக்கும்?

ஒருவர் வீட்டு உரிமையாளராக இல்லாதபோது- குத்தகைதாரராக இருக்கும்போது அவர் அந்த வீட்டைப் பராமரிக்கவோ, பழுதுபார்க்கவோ அல்லது மேம்படுத்தவோ செய்வாரா? மாறாக, சொத்து அரசுக்கு சொந்தமானது என்பதால், 4 ஆண்டுகளும் அரசே பராமரிப்பு செய்யுமா? குத்தகைக்கு விடப்படும் சொத்துக்கள் சார்ந்த துறைகளில் பணியாற்றுவோருக்கு வேலை வாய்ப்பு உறுதி செய்யப்படுமா, இட ஒதுக்கீடு முறை கடைப்பிடிக்கப்படுமா?"

- இவ்வாறு ப. சிதம்பரம் கேள்விகளை எழுப்பியுள்ளார்.

## எல்.அய்.சி., நவீன இந்தியா

1956 ஆகஸ்ட் 31ஆம் தேதி மாநில மறுசீரமைப்பிற்கான சட்டம் இயற்றப் பட்டது. இதற்கு அடுத்த நாள், செப்டம்பர் 1ஆம் தேதி இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கான சட்டம் இயற்றப்பட்டது. முதல் சட்டம் எவ்வளவு முக்கியமானதாக இருந்ததோ, அதே அளவுக்கு இந்த இரண்டாவது சட்டமும் முக்கியமானதாக இருந்தது. இருக்கிறது.

இந்தச் சட்டத்தின்படிதான் இந்தியாவில் உள்ள காப்பீட்டு நிறுவனங்கள் தேசிய மயமாக்கப்பட்டு இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் உருவாக்கப்பட்டது. இதற்கு ஒரு காரணமாக அமைந்தவர் இந்திரா காந்தியின் கணவரான பெரோஸ் காந்தி.

1955இல் ராம் கிஷன் டால்மியா என்ற மிகப் பெரிய தொழிலதிபர் தான் நடத்திவந்த இன்சூரன்ஸ் கம்பனியிலிருந்தும் மற்றொரு வங்கியிலிருந்தும் பணத்தை எடுத்து டைம்ஸ் ஆஃப் இந்தியா இதழை நடத்திவந்த பென்னட் அண்ட் கோல்மன் நிறுவனத்தை வாங்கினார். விரைவிலேயே அந்த வங்கி திவாலானது. இந்த விவகாரத்தை நாடாளுமன்றத்தில் எழுப்பிய பெரோஸ் காந்தி, இன்சூரன்ஸ் நிறுவனங்கள் தொடர்ந்து தவறிழைப்பதாகக் குற்றம்சாட்டினார்.

மேலும், இந்த இன்சூரன்ஸ் நிறுவனங்கள் தங்கள் பணத்தை முதலீடு செய்யும் விதம் குறித்தும் காப்பீடுகளை தராமல் ஏமாற்றுவது குறித்தும் பெரோஸ் கேள்வியெழுப்பிவந்தார்.

அந்தத் தருணத்தில் இந்தியாவில் வலுவான சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் ஏதும் இல்லாததும் அரசின் கவனத்தில் இருந்தது. ஆயுள் காப்பீடு போன்றவை ஏழைகளுக்கு எட்டாத உயரத்தில் இருந்தன. இவற்றுக்கெல்லாம் தீர்வாகவே காப்பீட்டு நிறுவனங்களை தேசிய மயமாக்க நேரு தலைமையிலான இந்திய அரசு முடிவெடுத்தது.

இதையடுத்து அந்தத் தருணத்தில் இந்தியாவில் இயங்கிவந்த 245 காப்பீட்டு நிறுவனங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் - எல்அய்சி உருவாக்கப்பட்டது. எல்லா நிறுவனங்களிலும் சேர்த்து 27,000 பணியாளர்கள் இருந்தார்கள். சுமார் 400 கோடி ரூபாய் சொத்து, அதன் பராமரிப்பில் இருந்தது. 50 லட்சம் பாலிசிகள் செயல்பாட்டில் இருந்தன. மொத்தமாக 1,000 கோடி ரூபாய்க்கு காப்பீடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த இணைப்பை அடுத்து, இந்தியாவின் மிகப் பெரிய அளவில் ஊழியர்களைக் கொண்ட நிறுவனமாக எல்அய்சி உருவெடுத்தது. 2017வாக்கில் 1.2 லட்சம் பணியாளர்களும் 12 லட்சம் ஏஜென்டுகளும் இருந்தனர். சுமார் 27.7 லட்சம் கோடி ரூபாய் சொத்து அதன் பராமரிப்பில் இருந்தது. 30 கோடி பாலிசிகள் செயல்பாட்டில் இருந்தன.

இந்த 65 ஆண்டுகளில் எல்அய்சியில் திரண்ட பணம் பெரும்பாலும் தேசக் கட்டமைப்பிலேயே முதலீடு செய்யப்பட்டது. இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு எல்அய்சி கடன் கொடுத்தது. ஐந்தாண்டுத் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதியில் கிட்டத்தட்ட ஐந்து சதவீதத்தை எல்ஐசியே கொடுத்தது. சில நூறு கோடிகளில் துவங்கிய இந்தத் தொகை, இப்போது சில லட்சம் கோடிகளாக உயர்ந்து நிற்கிறது.

எல்ஐசி முதலீடு செய்த பணத்தை வைத்தே பிலாய் உருக்காலை போன்ற மிகப் பெரிய உருக்காலைகள், மாநில மின்வாரியங்கள், ஐஐடிகள், ஐஐஎம்கள், சாலைகள் போன்றவை இந்தியாவில் உருவாக்கப்பட்டன.

பங்குச் சந்தைகள் ஆட்டம்காணும்போது, எல்ஐசியின் பணம் பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்டு, பங்குச் சந்தை முதலீட்டாளர்களின் பணம் காப்பாற்றப்பட்டது.

1980களில் ஒரு சம்பவம் நடந்தது. எல் அண்ட் டி நிறுவனத்தை மொத்தமாக கையகப்படுத்த நினைத்த அம்பானிகள் அந்த நிறுவனத்தின் பங்குகளை வைத்திருந்த பல நிறுவனங்களில் இருந்து அவற்றை வாங்கினர். முடிவில் தீருபாய் அம்பானி, அனில் அம்பானி, முகேஷ் அம்பானி ஆகியோர் அதன் இயக்குனர் குழுமத்தில் இடம்பெறும் நிலை வந்தது. அந்தத் தருணத்தில் இதற்கு எதிராக பெரும் குரல்கள் எழுந்தபோது, எல் அண்ட் டியில் பெருமளவு பங்குகளை வைத்திருந்த எல்ஐசி அதைத் தடுத்து நிறுத்தியது.

கடைசிவரை அம்பானிகளால், எல் அண்ட் டியை முழுமையாக வாங்க முடியவில்லை.

இதுபோல 2000களின் துவக்கத்தில் பிர்லா எல் அண்ட் டியை வாங்க முயன்றபோதும் எல்ஐசி அதனைத் தடுத்து நிறுத்தியது. யாரோ ஒரு தனியார் முதலாளி, மற்றொரு தனியார் நிறுவனத்தை வாங்கு முயற்சி அல்ல அது. எல் அண்ட் டியை வாங்குவதன் மூலம், தன்னுடைய கிராசிம் சிமென்ட்டிற்கு எல் அண்ட் டி சிமென்ட் மூலம் நிலவும் போட்டியை நீக்கி, சிமென்ட் சந்தையில் ஆதிக்கம் செலுத்துவதுதான் பிர்லாவின் நோக்கம். இது முறியடிக்கப்பட்டது.

செப்டம்பர் 1 - எல்அய்சி உருவாக்கப்பட்ட தினம்.

**– ஊடகவியலாளர் முரளிதரன்**

**பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து பா.ஜ.க. ஆட்சி வரை – கட்டுரை அடுத்த இதழில் தொடரும்**

# பெரியார் பிறந்த நாள்: கழகக் கலந்துரையாடல் முடிவுகள்

**மடத்துக்குளம் :** திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் ஒன்றிய திராவிடர் விடுதலைக் கழக ஒன்றிய கலந்தாய்வு கூட்டம் மடத்துக்குளம் மோகன்வீட்டில் 05.09.2020 அன்று மாலை 4 மணியளவில் சிவானந்தம் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

1) பெரியார் பெருந்தொண்டர் மடத்துக்குளம் மோகன் மறைவுக்கு மடத்துக்குளம் ஒன்றியத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கல் தெரிவிப்பதுடன் அவர் விட்டுச் சென்ற பணிகளை தொடர்ந்து முன்னெடுப்பது.

2) வரும் செப்டம்பர் 17 தந்தை பெரியார் பிறந்த நாள் அன்று காரத்தொழுவு, கணியூர், கடத்தூர், மடத்துக்குளம், கொழுமம், ருத்ராபாளையம், உடுமலை பேட்டை ஆகிய இடங்களில்பெரியார் படம் திறந்து கழகக் கொடி எற்றி கொண்டாடுவது

3) அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் என்ற சட்டத்தை நடைமுறைப்படுத்திய தமிழக அரசுக்கும் முதல்வருக்கும் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் நன்றி தெரிவிப்பது.

கூட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகப் பொருளாளர் சு. துரைசாமி மாவட்ட தலைவர் முகில் ராசு, ஒன்றியத் தலைவர் கணக்கன், உடுமலை பொறுப்பாளர் இயல் மற்றும் தோழர்கள் பாண்டியநாதன், ஜோதி, சாந்தி, கருப்புசாமி, முகமது அலி ஜின்னா, அய்யப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சென்னை திருவல்லிக்கேணி பகுதி :** திராவிடர் விடுதலைக் கழகக் கலந்துரையாடல் 02.09.2021 மாலை 6 மணியளவில் வி.எம். தெரு பெரியார் படிப்பகத்தில், திருவல்லிக்கேணி பகுதி செயலாளர் ப.அருண்குமார் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக, மருத்துவர் அனிதா 4 ஆம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

கலந்துரையாடலில், பெரியார் படிப்பகம் அருகில் பெரியார் பிறந்தநாள் விழா கொண்டாடுவது, பகுதித் தோழர்களிடம் மாதம் சந்தா வசூல் செய்வது, மாதம் தோறும் நிமிர்வோம் வாசகர் வட்டம் ஒருங்கிணைப்பது, பகுதிகளில் புதிய பொறுப்பாளர்களை நியமிப்பது.

**மயிலைப் பகுதி :** சென்னை மயிலைப் பகுதி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கலந்துரை யாடல் 30.08.2021 அன்று மாலை 7 மணியளவில், தலைமை அலுவலகத்தில் நடைப்பெற்றது. கலந்துரையாடலுக்கு மயிலை மனோகர் தலைமை வகித்தார்.

கலந்துரையாடலில், 1. பெரியார் பிறந்தநாள்; 2. இயக்கத்தின் அடுத்த கட்ட நகர்வுகள்; 3. பகுதி மாத சந்தாக்கள்; 4. மயிலை பகுதி பெரியார் படிப்பகம் சீரமைப்பு; 5. புரட்சி பெரியார் முழக்கம், நிமிர்வோம் சந்தா அதிகளவில் சேர்ப்பு ஆகியவைகளை பற்றி தோழர்களுடன் கலந்துரையாடல் நடைப்பெற்றது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 9th September 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN